

ஆரோவில் அருகே உள்ள சஞ்சீவி நகர் மோகன கலாசார மையத்தில், சிறுவர்களின் கலைத்திறனை வளர்க்கும் வகையில், பயன்படுத்தப்படாத பொருட்களை கொண்டு கலை பொருட்கள் தயாரிக்கும் பயிற்சி அளிக்கப்பட்டது.



புதுச்சேரி அரசு பொது நடந்த தொடர் மருத்துவ க நினைவு பரிசு வழங்கினார்

# பள்ளி சிறுவர்களுக்கு கலைத்திறன் பயிற்சி

புதுச்சேரி, செப். 8–

சஞ்சீவிநகர் மோகன கலாசார மையத்தில், பள்ளி சிறுவர்களின் கலைத் திறமையை வளர்க்கும் வகையில், கலைப்பொருட்கள் தயாரிக்கும் பயிற்சி அளிக்கப்பட்டது.

ஆரோவில் அருகே உள்ள சஞ்சீவி நகரில், மோகன கலாசார மையம் கடந்த 15 ஆண்டுகளாக இயங்கி வருகிறது. இங்கு, சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் சிறுவர்களின் திறமையை வெளிப்படுத்தும் வகையில் நடனம், பாட்டு, இசை மற்றும் கைவினை பொருட்கள் தயாரிக்கும் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

மேலும், ஆரோவில் சுற்றுலாப்பயணிகளுக்கு, இந்தியாவின் கலாசாரம் குறித்தும் பயிற்சி அளிக்கப்படுகிறது. ஆண்டுதோறும் இப்பயிற்சி மையத்தில், நூற்றுக்கணக்கான வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் பயிற்சி பெற்று செல்கின்றனர்.

தற்போது, இந்த மோகன கலாசார மையத்தில் சிறுவர்களின் கலை திறமையை வளர்க்கும் பொருட்டு, பயன்படுத்தப்படாத பொருட்களை கொண்டு கலை பொருட்கள் தயாரிக்கும் பயிற்சி முகாம் துவங்கியது.

முகாமில், ஏராளமான சிறுவர்கள் பங்கேற்று, திருமண அழைப்பிதழ்கள், அட்டைகள், பேப்பர்கள் உள்ளிட்டவைகளை கொண்டு வாழ்த்து அட்டைகள், கலைப் பொருட்களை தயாரித்து வருகின்றனர். ஆலங்குப்பத்தை சேர்ந்த நாயகம் பயிற்சி அளித்து வருகிறார்.

இங்கு, சிறுவர்கள் தயாரிக்கும் பொருட்களை, இம்மையத்திற்கு வரும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கு வாழ்த்து அட்டைகளாக வழங்கப்படுகிறது. இந்த வாழ்த்து அட்டைகள் சுற்றுலாப்பயணிகளிடம் வரவேற்பை பெற்றுள்ளது.

முகாம் ஏற்பாடுகளை, மோகன கலாசார நிர்வாகி பாலசுந்தரம், ஒருங்கிணைப்பாளர் ஏழுமலை ஆகியோர் செய்து வருகின்றனர்.

CS Scanned with CamScanner